## ஆகஸ்ட் - 5

**" அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."**

**- ரோம 8 : 28.**

இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தேவனுடைய எல்லா ஜனங்களும் தெய்வீக பராமரிப்புக்கு தங்களுக்காகக் குறித்திருக்கிறதாகக் தோன்றுகிற தங்களுடைய பங்கில் திருப்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். சோம்பலுள்ளவர்களாயிராமல், தங்களுடைய கைகளுக்குக் கிடைக்கிற எல்லாவற்றையும் செய்து மனரம்மியத்துடன் இருக்க வேண்டும். அமைதியற்றவர்களாயிராமலும், தேவன் பேரிலும், அவருடைய பராமரிப்பின் பேரிலும் குறை சொல்லாதவர்களுமாயிருக்க வேண்டும். தனிப்பட்டவர்களாகக் நம்மை கர்த்தர் ஏதோ சில விசேஷித்த ஊழியத்திற்காக தகுதியாக்கிக் கொண்டும் ஆயத்தம் பண்ணிக்கொண்டும் இருக்கலாம். அதற்காகவே அவர் நம்மை ஆயத்தம் செய்ய அனுபவங்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய சொந்த குறைபாடுகளை நிதானிக்கத் தகுதியற்றவர்களாயிருக்கிறோம் என்பதையும் ஞாபகப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், நமக்கு மிகவும் அதிகமாக உதவியாயிருக்கக் கூடிய அனுபவங்களைக் குறித்து நிதானிக்கத் தகுதியற்றவர்களாய் இருக்கிறோம்.

**- Z ’00, 22(R 2562)**

முழு இருதயத்தோடு தேவனை நேசிக்கிற அவருடைய அழைக்கப்பட்டிருக்கிற பிள்ளை, தன்னுடைய எல்லா நலன்களும் தெய்வீக கவனத்திலும் மேற்பார்வையிலும் இருக்கிறதென்பதையும், தெய்வீக வழி நடத்துதலுக்கடியில் தன்னுடைய எல்லா அனுபவங்களும் சேர்ந்து தன்னை கிறிஸ்தவனாக அபிவிருத்திச் செய்யத் திட்டமிடுகின்றன என்றும் சொல்லியிருக்கிற இந்த வாக்கியத்திலுள்ள நம்பிக்கையில் எவ்வளவு ஆசீர்வாதமான ஆறுதலை கண்டுகொள்ளுகிறான். பரிதாபமான நிலையிலுள்ள உலகத்தாருடைய பாக்கியம், எல்லாவிதமான விபத்துக்களுக்கும் பாதுகாப்பின்றி விடப்பட்டிருக்கிறது. இது போன்றில்லாது, கிறிஸ்தவன் தன்னுடைய அனுபவங்களில் விபத்துக்களே நேரிடுவதில்லை என்று உறுதிபண்ணப்பட்டிருக்கிறான். தனக்கு என்ன சம்பவித்தாலும் அது தேவனுடைய அன்பின், கவனிப்பின் ஒரு வெளிப்படுத்தலாகும் என்றும், தன்னுடைய ஜீவியத்தின் உயர்வான நோக்கமாகிய கிறிஸ்துவைப் போலாகுதலை அடைய அவனுக்கு அது உதவுகிறதென்றும் அறிந்து கொள்ளுகிறான்.

**- P ’26, 108.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 5:20; உபா 8:2; எரே 24:5-7; 2கொரி 4:15-18; எபி 12:9-11; வெளி 3:19; ரோம 1:6; 9:11,23,24; 1பேது 5:7,10; சங் 76:10; ஏசா 51:2; நீதி 16:7.

**கோபுர வாசிப்பு :** Z ’10, 72 (R 4566)

**வினாக்கள் :** நான் தேவனைப் பிரதானமாக நேசிக்கிறேனா? அழைக்கப்பட்டவன் என்பதற்கு எனக்குள்ள அத்தாட்சி என்ன? இந்த வாரத்தில் "எல்லா காரியங்களும்" எதில் எனக்கு நன்மையாயிருந்தன?